செ.வெ.எண்:28 நாள்: 13.08.2021

## நாகப்பட்டினத்தில் நடைபெற்ற உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவித்தல் தொடர்பான நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் VPN திருமண மண்டபத்தில் உலக தாய்ப்பால் வார விழாவை முன்னிட்டு தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவித்தல் தொடர்பான நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் குத்து விளக்கேற்றி இன்று (13.08.2021) தொடங்கி வைத்தார்.

உலக தாய்ப்பால் வார விழா நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக தாய்ப்பால் ஊட்டுதலை பாதுகாப்பது குறித்து வேல்டு விஷன் இந்தியா தொண்டு நிறுவனம் சார்பில் நடத்தப்பட்டது. விழாவில் மாவட்ட ஆட்சியர் தெரிவித்ததாவது.

தாய்ப்பால் கொடுப்பது மிகவும் அத்தியாவசியமாகும். தாய்ப்பாலுக்கு இணை எதுவும் கிடையாது. தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் குழந்தைகளுக்கு சளி, வயிற்றுப்போக்கு, போன்ற நோய்கள் வராது. அதனால் எல்லா தாய்மார்களும் தாய்ப்பாலின் முக்கியத்துவத்தை உறுதி மொழியாக எடுத்து செயல்பட வேண்டும். இந்த தாய்ப்பால் குழந்தைகளுடைய வளர்ச்சியை மட்டுமல்லாது நல்ல ஆரோக்கியத்தையும் கொடுக்கும். தாய்ப்பால் கொடுக்கும் சமயத்தில் நல்ல சத்தான உணவை உட்கொள்ள வேண்டும். குழந்தை பிறந்த 1 மணி நேரத்திற்குள் முதல் உணவாக தாய்ப்பால் (சீம்பால்) கொடுக்கவும், 6 மாதம் வரை தண்ணீர் கூட கொடுக்காமல் தாய்ப்பால் மட்டுமே கொடுக்க வேண்டும், 6 மாதத்திற்கு பிறகு தாய்ப்பாலுடன் இணை உணவு சேர்த்து கொடுக்க வேண்டும். மேலும் 2 வயது வரை தாய்ப்பால் தொடர்ந்து கொடுக்கவும் தாய்ப்பால் கொடுப்பதன் மூலமாக குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் தாய்க்கு ஏற்படும் நன்மை பற்றியும் தமிழ்நாடு அரசு சார்பாக மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி துறையின் மூலமாக அனைத்து உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகிறது. இதை பயன்படுத்தி கொண்டு

முறையாக பின்பற்றினால் தாய்மார்களும், குழந்தையும் ஆரோக்கியமான வாழ்வு வாழ முடியும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

பின்னர் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனையில் உள்ள கொரோனா சிறப்பு வார்டுகளுக்கு 60 கட்டில்கள், மெத்தைகள், 10 ஆயிரம் கையுரைகள், கிருமிநாசினி, 1 லட்சம் முகக்கவசம் உள்ளிட்ட உள்ளிட்ட 16 இலட்சம் மதிப்பீலான மருத்துவ உபகரணங்களை வேல்டு விஷன் இந்தியா தொண்டு நிறுவனத்தின் திட்ட மேலாளர் திருமதி.ஜெயலட்சுமி அவர்கள் பொருட்களை மாவட்ட ஆட்சியர் மருத்துவர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களிடம் வழங்கினார். அதனை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சியர் கொரோனா சிறப்பு வார்டு பயன்பாட்டிற்கு சுகாதாரத்துறை அதிகாரிகளிடம் மருத்துவ உபகரண பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குநர் திருமதி.D.ராணி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் திரு.ப.விஜயகுமார், வருவாய் கோட்டாட்சியர் திரு.இ.ரா.மணிவேலன், நகராட்சி ஆணையர் திருமதி.ஸ்ரீதேவி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.தனபால், வட்டாட்சியர் திரு.ஜெயபால், வேல்டு விஷன் தொண்டு நிறுவனத்தின் இயக்குநர் திருமதி.ஜெயலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**